**சாட்சி அழைத்து சத்திய பிரமாணம் செய்து முதல் விசாரணை :**

நாள் : 22.10.19

நேரம் : 11.44 AM.

நான் வாணியம்பாடி ஜாப்ராபாத்தில் சியாளி தெரு, கதவு எண் 2/58 என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஏ.எம்.லெதர் என்ற பெயரில் வாணியம்பாடியிலும், சென்னையிலும் வியாபாரம் செய்து வருகிறேன். புகார்தாரர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். 09.04.18ல் ரூ.30,000/-க்கு புகார்தாரரிடமிருந்து தோல் வாங்கினேன். அன்றைய தினமே மாலை பணம் கொடுப்பதாக சொல்லியிருந்தேன். அன்றைய தினம் பணம் கொடுக்க இயலவில்லை. அதற்காக புகார்தாரர் என்னிடம் ஒரு காசோலை கேட்டார்.அப்பொழுது நான் நிரப்பபடாத காசோலை கொடுத்தேன். 11.04.18ல் புகார்தாரருக்கு மேற்படி ரூ.30,000/-ஐ கொடுத்து விட்டேன். புகார்தாரர் காசோலை வீட்டில் இருப்பதாகவும், இரண்டு நாட்களில் தருவதாக தெரிவித்தார். அதன் பிறகு புகார்தாரர் என்னுடைய காசோலையை திருப்பி தரவில்லை. அந்த காசோலையை வைத்து கொண்டு அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். புகார்தாரருக்கு நான் எந்த பாக்கியும் தர வேண்டியதில்லை.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

புகார்தாரரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார்தாரர் என்ன வியாபாரம் செய்கிறார் என்றால் தோல் வியாபாரம் செய்கிறார். அவர் நிறுவனத்தின் பெயர் எனக்கு தெரியாது. 09.06.18ம் தேதி தோல் நான் எங்கு வாங்கினேன் என்றால் புகார்தாரர் நிறுவனத்தில் தான் வாங்கினேன். புகார்தாரர் என் மீது என்ன புகார் கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் ரூ.6,00,000/- கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ரூ.6,00,000/-க்கு தான் இந்த வழக்கு காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிறுவனத்தின் பெயர் என்னவென்றால் ஏ.எம்.லெதர்ஸ் ஆகும். நீதிமன்றத்தில் ஆஜரிலுள்ள 2வது எதிரியின் பெயர் என்னவென்றால் அப்சர். 2வது எதிரியும் நானும் அந்த நிறுவனத்தின் பங்குதாரர்கள் என்றால் சரிதான். புகார்தாரர் என்னிடம் வாங்கிய காசோலை 2 நாட்களில் திருப்பி தராததால் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தேனா என்றால் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் தெரிவிக்கவில்லை. எங்கள் நிறுவனத்திற்கு எதிராக காசோலை மோசடி வழக்கில் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக பதில் அறிவிப்பு ஏதேனும் நான் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. பதில் அறிவிப்பு எந்த மாதத்தில், எந்த தேதியில் அனுப்பியுள்ளேன் என்றால் தெரியாது. அந்த பதில் அறிவிப்பு யாருக்கு அனுப்பினேன் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த பதில் அறிவிப்பில் என்ன சங்கதிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியும். தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார், அதில் உள்ள விவரம் தெரியாது என்றால் சரிதான். வழக்கறிஞர் சொல்லிய விவரங்கள் இதில் உள்ளதா என்று அறுதியிட்டு கூற இயலாது என்றால் சரியல்ல. காசோலை திருப்பபட்ட பின்பு வங்கியிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவிக்கப்பட்டது. எத்தனை முறை வங்கி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் ஒரு முறை தான் தெரிவிக்கப்பட்டது. காசோலை திருப்பபட்ட பிறகு

புகார்தாரரை நான் போய் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. இவ்வழக்கில் எனக்கு அனுப்பபட்ட சட்ட அறிவிப்பில் உள்ள விவரங்களை வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்தார். எனது சொந்த ஊர் எதுவென்றால் 30, 40 ஆண்டுகளாக வாணியம்பாடியில் உள்ள ஜாப்ராபாத்தில் உள்ளது என்றால் சரிதான். புகார்தாரரும் நானும் ஒரே தொழில் செய்வதால் புகார்தாரருடன் எனக்கு நல்ல பழக்கம் உள்ளது என்றால் சரிதான். 07.12.2017 முதல் 02.01.18 வரை புகார்தாரரிடம் நான் தோல் வாங்கிய வகையில் ரூ.8,11,871/- பாக்கியிருந்தது என்றால் சரியல்ல. மேற்படி தொகைகள் ரூ.1,91,000/-ஐ புகார்தாரருக்கு 2வது எதிரியும் நானும் சேர்ந்து கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 11.04.18ம் தேதி மீதி பாக்கி தொகை ரூ.6,20,871/-ஐ நேரில் வந்து புகார்தாரர் எங்களிடம் கேட்ட பொழுது எங்கள் நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி வருவதால் பாக்கி தொகை தவணை முறையில் செலுத்தி வருவதாக கூறி 11.04.18ல் வழக்கு காசோலையை புகார்தாரருக்கு ரூ.90,000/- நாங்கள் நிரப்பி கொடுத்தோம் என்றால் சரியல்ல. 09.04.18ம் தேதி ரூ.30,000/-க்கு தோல் வாங்கியதாகவும் அதற்காக இந்த காசோலையை கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிலுள்ள கு.மு.த.சா.ஆ1 ல் உள்ள காசோலை எங்கள் நிறுவனத்தை சார்ந்தது என்றால் சரிதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். இந்த காசோலையை நான் தான் புகார்தாரருக்கு நிரப்பி கொடுத்து விட்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாணியம்பாடியில் ரூ.50,00,000/-க்கு பலரிடம் தோல் வாங்கிவிட்டு பணம் திருப்பி தராததால் எங்கள் மீது வாணியம்பாடி காவல் நிலையத்தில் பலர் புகார் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தினால் பிணையில் விடக்கூடிய பிடியாணை பிறப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் என்னையும் 2வது எதிரியையும் கைது செய்யப்பட்டதா என்றால் சரிதான். போலிசார் பிடியாணையின்படி எங்கள் இருவரையும் கைது செய்த பொழுது ஓரிரு நாட்களில் பணத்தை செலுத்திவிடுவதாக உறுதியளித்ததின் பேரில் போலிசார் அந்த பிடியாணையின் படி எங்களை ஆஜர்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 11.04.18ல் புகார்தாரருக்கு ரூ.30,000/- கொடுத்ததற்கான ரசீது எதுவும் எழுதி பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலை புகார்தாரருக்கு நிரப்பபடாத காசோலையாக கொடுத்ததினால் புகார்தாரர் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை. ரூ.30,000/- புகார்தாரருக்கு கொடுத்த பொழுது வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. முதன்மை விசாரணையில் நான் சொல்லிய சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் நிறுவனம் லாபத்துடன் தான் இயங்கி வருகிறது என்றால் சரிதான். புகார்தாரருக்கு ரூ.6,20,871/-ஐ தர வேண்டி பாக்கியுள்ளது என்றும் அதில் ஒரு பகுதியாக ரூ.90,000/-க்கு இவ்வழக்கு காசோலை தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் மீதி உள்ள இதர தொகைக்கு தனியாக நடவடிக்கை எடுப்பதாக சொன்னால் சரியல்ல.

12.09 PM